10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 207 ஞாயிற்றுக்கிழமை டிசெம்பர் 17 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## யார் மீது தவறோ...?

யாழ்ப்பாணம், டிசெ. 17

"சாவகச்சேரி நகர சபைக்கு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர். அதனை அவதானிக்காமல் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது" எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்று நகர சபை உறுப்பினராகத் தெரிவானால், அவரைப் பதவி நீக்க 2 வருடங்கள் செல்லும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

"அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவருக்கு வாக்குரிமை இல்லாதது கண்டறியப்பட்டுள்ளது. அவர் தொடர்பில் கவனத்தில் எடுக்கப்படாது வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

06 ▶

# வாடகை கட்டாத எம்.பிக்கள்: எதிராக நடவடிக்கை ஆரம்பம்







யாழ்ப்பாணம், டிசெ. 17

டக்ளஸ் தேவானந்தா, சிவசக்தி ஆனந்தன், ரிசாட் பதியுதீன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. வவுனியா மாவட்ட அரச விடுதிகளை வாடகை செலுத்தாமல் பயன்படுத்தியமைக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றபோதே அவர் இதனை செய்தியாளர்களிடம் கூறினார்.

06 ▶

## கூட்டமைப்பு மக்களை உசுப்பேத்தி ஏமாற்றுகிறது

### சாடுகிறார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், டிசெ. 17

தமிழ் மக்கள் நலனில் அக்கறையற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலம் வந்துள்ளதால், மக்களை உசுப்பேத்தி ஏமாற்றத் தயாராகி வருகிறது எனச் சாடியுள்ளார் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

06 ▶

# முதலமைச்சரின் கூட்டம் அதிகாரிகளால் புறக்கணிப்பு

## அரச அதிபரும் செயலர்களைத் தடுத்தாராம்



யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கு மாகாணத்தில் காணப்படும் காணிப் பிணக்குகள் தொடர்பாக ஆராய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டிய கூட்டத்தை மன்னார் அரச அதிபர், பல பிரதேச செயலர்கள், அரச அதிகாரிகள் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர். அத்துடன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவிருந்த மன்னார் மாவட்ட பிரதேச செயலர்களை அரச அதிபர் கலந்து கொள்ளவிடாது தடுத்தார் என்று முதலமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

அரச காணிகள், மற்றும் மக்கள் காணிகளை அபகரிக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் எழும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டிய கூட்டத்தையே அதிகாரிகள்

06 ▶

## அவதானம்! வேகமாகும் காற்று

கொழும்பு, டிசெ. 17

நாட்டைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

06 ▶

## வாயே திறக்கேன்

### முதலமைச்சர் பிடிவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள், முரண்பாடுகள் தொடர்பிலான கேள்விகளுக்குப் பதிலளிக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ந்தும் மறுத்து வருகிறார்.

வடக்கில் உள்ள அரச காணிகள் குறித்து முதலமைச்சர் தலைமையில் வட மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலர்கள்,

06 ▶

## 30,000 போலி மருத்துவர்கள்

கொழும்பு, டிசெ. 17

நாடு முழுவதும் 30 ஆயிரம் போலி மருத்துவர்கள் உள்ளனர். அவர்களைக் கைது செய்யப் பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெறத் தீர்மானித்துள்ளதாக சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மேலும், போலி மருத்துவர்கள் குறித்துப் பொது மக்களும்

06 ▶

## தலைதெறிக்க ஓடியது வாள்வெட்டுக் கும்பல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

மக்கள் துரத்தித் துரத்தித் தாக்கியதில் ஆயுதங்களையும், மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தலை தெறிக்க ஓடியது வாள்வெட்டுக் கும்பல்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு கோண்டாவில் குட்செட் வீதியில் இடம்பெற்றுள்ளது.

அண்மைநாட்களாக அடங்கியிருந்த வாள்வெட்டுக் கும்பல் ஒன்று நேற்றைய தினம் கோண்டாவிலில் தமது அட்டகாசத்தை ஆரம்பித்தது.

இதைப் பார்த்த அப்பகுதி மக்கள் திரண்டெழுந்து வாள்வெட்டுக் கும்பலைத் தாக்கினர். மக்களின் தாக்குதலை எதிர்பார்க்காத வாள்வெட்டுக்

06 ▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# பாரம்பரிய உணவுக் கண்காட்சி





கரவெட்டி, டிசெ.17

பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி நிகழ்வு, இமையாணன் மேற்கு ஜே/359 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

குறித்த பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவையாளர் க.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி சுதேஸ்குமார், மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள், மாதர்சங்க அங்கத்தவர்கள் என்போர் கலந்து கொண்டனர். பாரம்பரிய உணவு வகைகளான குரக்கன், திணை, வரகு, அரிசிமா, ஒடியல், பனம் பொருட்கள் என்பனவும், அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு கண்காட்சியைப் பார்க்க வந்தவர்களுக்கு பாரம்பரிய இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டது. (அ-11)

# வீதியை மறைக்கும் வாகனங்களால் விபத்து

யாழ்ப்பாணம், டிசெ.17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரதான வாயிலுக்கருகாமையிலும், வைத்தியசாலைக்கு முன்பாகவும் ஏ- 9 வீதியின் ஓரமாக கனரக வாகனங்களை நிறுத்துவதனால் உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துகள் இடம்பெறும் அபாயம் உருவாகியுள்ளதாக நோயாளிகள் மற்றும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கருகாமையிலுள்ள உணவகங்களில் கனரக வாகனங்களின் சாரதிகள் உணவு உட்கொள்ளச் செல்லும் போது வாகனங்களை வீதியின் ஓரத்தில் வைத்தியசாலைக்கு வலப்பக்கமாக நிறுத்தி விட்டுச் செல்வதாகவும், இதனால் வைத்தியசாலையின் பிரதான வாயில் ஊடாக ஏ-9 வீதிக்கு வாகனங்களை ஏற்றும் போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் குறித்த வாகனங்கள் வீதியை முற்றாக மறைப்பதாகவும் இதனால் வி பத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் மீசாலை புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஏ-9 வீதி ஊடாக வயோதிபத் தம்பதியர் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருக்கும் போது, வீதியின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கதவினை சாரதி திறந்துள்ளார். அப்போது காரின் கதவுடன் தம்பதிகள் மோதி விழுந்த நிலையில் பின்னால் வந்த டிப்பர் மோதியதில் மனைவி சம்பவ இடத்திலேயே பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே வாகன நடமாட்டம் அதிகமாகவுள்ள குறித்த பிரதேசத்தில் கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவது தவிர்க்கப் பட வேண்டுமெனவும் இது தொடர்பாக உரிய தரப்பினர் உடன் நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (அ-11)

# வாழ்வாதார உதவி




வவுனியா, டிசெ.17

வவுனியா தவசிக்குளம் கந்தபுரம் கிராமத்திலுள்ள குடும்ப மொன்றின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கனடா கியுபைக் மொன்றியல் நகரை சேர்ந்த பாராவூர்தி சாரதிகள் நற்பணி மன்றத்தினால், 30 முட்டையிடும் கோழிகள் மற்றும் அவற்றுக்கான தீனிகள் என்பன கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

கணவனைப் பிரிந்த நிலையில் வாழும், தாயின் ஆதரவின் கீழ் நான்கு பிள்ளைகள் கொண்ட குடும்பத்துக்கே இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நற்பணி மன்றத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான பா. கதீஷன், பா.லம்போதரன், வ.பிரதீபன் ஆகியோர் இந்த உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர். (அ)

# சிவசிதம்பரத்தின் நினைவேந்தல் நேற்று





வவுனியா, டிசெ.17

வவுனியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரத்தின் 25 ஆவது நினைவு தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலத்தின் தலைமையில் நேற்றுக்காலை 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் ந. சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சரும் வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஜீ.ரி.லிங்கநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் மற்றும் அதிதிகளாக சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா.சேனாதிராஜா, வவுனியா இந்து மாமன்ற தலைவர் வை.செ.தேவராசா, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவர் மு.குகதாசன், யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல் துறை தலைவர் கே.ரி.கணேசலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், மாவட்ட - பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், வவுனியா வர்த்தக சங்கத் தலைவர், உள்ளூர் விலை பொருள் உற்பத்தி சங்க உறுப்பினர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், அமரரின் உருவப்படத்துக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# கசிப்புப் பெண் கைது

யாழ்ப்பாணம், டிசெ.17

சாவகச்சேரி பகுதியிலுள்ள வீட்டில் கசிப்புக் காய்ச்சிய மூன்று பெண் பிள்ளைகளின் தாயார் பொலிஸாரினால் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

போரின் போது, தனது கணவர் உயிரிழந்தமையாலேற்பட்ட வறுமை காரணமாகவே இவ்வாறு செயற்பட்டதாகப் பொலிஸாரிடம் குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார். கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காலணி வழங்கி வைப்பு

கிளிநொச்சி, டிசெ.17

கிளிநொச்சி மாவட்டக் கல்வி வலயத்தில் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த 23,363 மாணவர்களுக்குக் காலணிக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டதாகக் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 23,363 மாணவர்களுக்கும் 1200, 1300, 1400, 1500 ரூபா போன்ற பெறுமதிகளில் காலணிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



அமரர்
டாக்டர் தம்பு துரைராசா
(DAM)

கடந்த 17.11.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு தம்பு துரைராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.12.2017) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அல்வாய் தனத்தியவத்தை ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மதியம் 11 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பாமாலயம், மயிலிட்டி, அல்வாய்.
தொ.பே.: 0778728902

தகவல்:
குடும்பத்தினர்

எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 17 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## நாணயக் கயிற்றை இறுக்குங்கள்

வடமாகாணத்தில் காணி பிணக்குகள் தொடர்பாக ஆராய்வதற்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் ஒழுங்கமைத்திருந்த கூட்டத்துக்கு, பல பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் கலந்து கொள்ளாமல் தவிர்த்துள்ளனர். தவிர்த்தனர் என்பதை விடவும், தடுக்கப்பட்டனர் என்பதே உண்மை. அதுவும் மன்னார் மாவட்ட அரச அதிபர் தன் ஆளுகைக்கு உட்பட்ட அதிகாரிகள், இந்தக் கூட்டத்துக்குப் போகக் கூடாது என்று பகிரங்கமாகவே தடுத்துள்ளார்.

வட மாகாண மக்களுடைய காணிகளை வனவளத் திணைக்களமும், வன ஜீவராசிகள் திணைக்களமும் அபகரிப்பதனால் எழும் பிணக்குகள் தொடர்பாக ஆராய்வதற்கும், அவற்றுக்குத் தீர்வினைக் காண்பதற்குமே இந்தக் கூட்டத்தை முதலமைச்சர் ஏற்பாடு செய்திருந்தார்.

போருக்குப் பின்னர் வனவளத் திணைக்களமும், வன ஜீவராசிகள் திணைக்களமும் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் என, மக்கள் இதுநாள் வரை பயன்படுத்திய காட்டுப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். கிட்டத்தட்ட 30 வருடங்களாக வனவளத் திணைக்களமும், வன ஜீவராசிகள் திணைக்களமும் வடக்கில் உறங்கு நிலையிலேயே இருந்தன. அதனால் பயன்படுத்தப்படாதிருந்த காடுகளை வெட்டிக் களனியாக்கி, தமது வாழ்வாதார நிலமாக அதனைப் பலரும் மாற்றியிருந்தனர். போருக்குப் பின்னர் வனவளத் திணைக்களத்துக்கு கொடுக்கு முளைத்தது. அரச வனப் பகுதியில் அடாத்தாக மக்கள் குடியேறியதாக அவர்களின் இடங்களை மீண்டும் அபகரித்துக் கொண்டனர். இதனால் தமது இருப்பிடத்தையும், வாழ்வாதாரத்தையும் இழந்த பலர், தமக்கு நியாயம் வேண்டி நிற்கின்றனர்.

ஒருபுறம், இப்படி ஏற்கனவே குடியிருந்த மக்களின் காணிகளை வனவளத் திணைக்களமும், வன ஜீவராசிகள் திணைக்களமும் விழுங்கிக் கொண்டிருக்க, மறுமுனையில் இதே திணைக்களங்களுக்கு உரித்தான, வடக்கின் காட்டுப்பகுதிக்குள் பெருமெடுப்பில் புதிதாகக் குடியேற்ற முயற்சிகள் நடக்கின்றன. அவற்றைக் கண்டும் காணாதது போல இந்தத் திணைக்களங்கள் கண்ணை மூடிக் கொள்கின்றன. வில்பத்து, முல்லைத் தீவுக் காடுகளில், பெருமளவான காட்டுமரங்களை அழித்து, வெட்ட வெளியாக்கி அங்கு முஸ்லிம் மக்களைக் குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார். ஒரு அமைச்சரின் அனுசரணையோடு இந்த அத்துமீறல் நடந்து கொண்டிருப்பதால், வன வளத் திணைக்களமும், வன ஜீவராசிகள் திணைக்களமும் கைகட்டி, வாய் பொத்தி சேவகம் செய்கின்றன.

அத்தோடு வன்னியின் காட்டுப் பகுதியை அண்மித்த ஆற்றங்கரையோரமாக சட்டவிரோத மண் அகழ்வு தொடர்கின்றது. அதனையும் தடுக்க இவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், வன்னிக் காட்டின் மண் வளம் சுரண்டப்பட்டுக் கொண்டே போகின்றது. சட்ட விரோதமாக, பயந்தரு மரங்களைத் தென்னிலங்கையில் இருந்து வருபவர்கள் எந்தக் கூச்சமோ, பயமோ இல்லாமல் வெட்டியெடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் இந்தக் காடுகளின் பூர்வ குடிகளான வன்னி மக்கள் தமது விறகுத் தேவைக்கு கூட அனுமதியில்லாமல் ஒரு சுள்ளியைத் தானும் முறிக்க முடியாது. எல்லாவற்றுக்கும் அனுமதி பெற்றே அவர்கள் செய்ய வேண்டியுள்ளது.

இப்படி மக்களுக்கும், வன வளத் திணைக்களத்துக்கும், வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கவே முதலமைச்சர் முடிவெடுத்து இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் பல அதிகாரிகள் வரவில்லை. அதனால் கூட்டம் பிசுபிசுத்துப் போனது.

குறித்த அதிகாரிகள் கலந்து கொள்ளாததன் மூலமும், அவர்கள் உயர் அதிகாரிகளால் தடுக்கப்பட்டதன் மூலமும், வன்னி மக்களுக்கு குறித்த திணைக்களங்கள் அநீதி இழைத்து வருகின்றன என்பது புலனாகியுள்ளது. அத்துடன் ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் அழைப்பு விடுத்தும் கூட, அதை அரச அதிகாரிகள் தட்டிக் கழிக்கின்றனர் என்றால், முதலமைச்சரின் அதிகாரம் என்பது என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. ஒரு முதலமைச்சரின் சொல்லைக் கேட்காமல், அதிகாரிகள் அசட்டை செய்கையில், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூட முதலமைச்சருக்கு சக்தி இல்லை. அப்படித்தான் இலங்கையின் அரசியலமைப்பு சட்டங்கள் போட்டு முதலமைச்சர்களின் கையை இறுகக் கட்டிப் போட்டுள்ளது. முதலமைச்சரும் கூட்டத்துக்கு வராத அதிகாரிகளை அழைத்து, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல், மத்திய அரசே அவர்களைத் தடுத்துள்ளது என்று புலம்பிச் சென்றுள்ளார். இது ஒரு தவறான முன்னுதாரணம் ஆகிவிடவும் கூடும். நாங்கள் என்ன செய்தாலும் முதலமைச்சரால் கூட எதுவும் செய்ய முடியாது என்ற மனோபாவம் குறித்த அதிகாரிகளிடத்தே உண்டாகி விட்டால், இப்போது செய்வதை விடவும் இன்னும் அதிக அநீதிகளை காட்டின் மைந்தர்களான மக்களுக்குச் செய்யக் கூடும். நாணயக் கயிற்றைக் கொஞ்சம் இறுக்கிப் பிடிக்க வேண்டும் முதலமைச்சர். அப்போதுதான் மாடுகள் கொஞ்சமேனும் அடங்கி, வண்டிலை ஒழுங்கான முறையில் பயணிக்க உதவும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பற்றுச்சீட்டே முக்கியம்...!



யாழ்ப்பாணம், டிசெ. 17

"புகையிரம் சென்றுகொண்டிருக்கும் போது யாரும் ஏறலாம், இறங்கலாம். ஆனால் அதில் பயணிக்க பற்றுச்சீட்டு எடுத்திருக்க வேண்டும்."

இப்படி ஈ.பி.டி.பி.யின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.யில் இருந்து விலகிய மு.சந்திரகுமார், நீக்கப்பட்ட சி.தவராசா ஆகியோர் மீண்டும் கட்சியில் இணைக்கப்படுவரா எனக் கேட்டதற்கே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அதுபற்றி கட்சியின் உயர் மட்டமே முடிவு செய்யும் என்றும் கூறினார்.

ஈ.பி.டி.பி.யின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்து டக்ளஸ் தேவானந்தா உரையாடினார்.

இதன்போது "உங்கள் கட்சியிலிருந்து சிலர் நீக்கப்பட்டு இருக்கின்றனர். அதே வேளையில் சிலர் விலகியும் இருக்கின்றனர். குறிப்பாக கட்சியில் இருந்து நீக்கப்பட்ட வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, கட்சியிலிருந்து விலகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் கட்சியில் மீள இணைக்கப்படுவரா?" எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா "இது குறித்து இப்போது எதனையும் தெரிவிக்க முடியாது. கட்சி உயர் மட்டத்தில் கலந்துரையாடிய பின்னரே முடிவை அறிவிக்க முடியும். புகையிரதம் சென்று கொண்டிருக்கின்ற போது யாரும் ஏறலாம். யாரும் இறங்கலாம். அந்தப் புகையிரதத்தில் செல்லக் கட்டாயம் பற்றுச்சீட்டு எடுத்திருக்க வேண்டும். இதே போன்று எல்லா விடயங்களிலும் உரிய முறையில் செயற்படுவது அவசியம் தானே. ஆகவே இந்த விடயம் குறித்து கட்சியில் பரீசிலித்து முடிவை அறிவிப்போம். - என்றார்.

இதேவேளை சந்திரகுமார் மற்றும் தவராசா ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணையவுள்ளனர் என செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'பாழ்வெளி' நேற்று வெளியீடு



யாழ்ப்பாணம், டிசெ.17

உடுவில் அரவிந்தனின் 'பாழ்வெளி' சிறுகதைத் தொகுதி வெளியீடு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

எழுத்தாளர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். நிகழ்வில் படைப்பாளிகளான சி.ரமேஷ், தி.செல்வமனோகரன், இ.இராஜேஷ்கண்ணன் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர். (அ)

## 30 பவுண் நகையும் பணமும் கத்திமுனையில் கொள்ளை

வடமராட்சி, டிசெ. 17

வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியரை கத்திமுனையில் மிரட்டி 30 பவுண் நகை, 40 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் மந்திகையில் இடம்பெற்றுள்ளது.

மந்திகை - கொடிகாமம் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த மூன்று பேர் கொண்ட கொள்ளையர்கள், வயோதிபத் தம்பதியரை கத்தி முனையில் மிரட்டி ஓரிடத்தில் இருத்தியுள்ளனர்.

பின்னர் நிதானமாக வீட்டை சுமார் ஒரு மணி நேரம் சல்லடை போட்டுத் தேடி 30 பவுண் நகை, 40 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டனர்.

பின் வயதான பெண்ணின் காதில் அணிந்திருந்த தோட்டையும் கழற்றிச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச -11)

## மருந்துக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, டிசெ.17

மருந்து வில்லைகளின் நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விலைகளை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருந்து வில்லைகளை விற்பனை செய்யும் மருந்தகங்கள் அவற்றின் விலைகளை காட்சிப்படுத்த வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில், இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

## முன்னாள் யாழ். நீதிபதி உள்ளூராட்சியில் போட்டி

சிலாபம், டிசெ.17

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் முன்னாள் ஆணையாளர் திருமதி கே.சிவபாதசுந்தரம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்புரிமையை பெற்று எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

சிலாபம் நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பு மனுவில் அவர் கையொப்பமிட்டுள்ளார். (அ)

## வேட்பு மனு நிராகரிப்பு நீதிமன்றை நாடுங்கள்

கொழும்பு, டிசெ. 17

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்றை நாடி நியாயம் பெற முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள்தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வேட்புமனுக்களை பூர்த்தி செய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு வழிகாட்டல்களை வழங்கியிருந்தாலும் அது சரியான முறையில் பின்பற்றப்படவில்லை. சிலர் சுபநேரத்தை கருத்திற் கொண்டு இறுதித் தறுவாயிலேயே வேட்பு மனுக்களை தாக்கல் செய்தார்கள். இதனால் பிழைகளைத் திருத்திய மைக்க கால அவகாசம் கிடைக்கவில்லை என்று கூறினார். (ச)

## இன்று நாளும் கோளும்

17.12.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 02 ஆம் நாள்

சதுர்த்தசி மு.ப. 10.33 மணி வரை | குளிகை பி.ப. 03.00 – 4.30 மணி வரை | கரணம் மு.ப. 10.30–12.00

இராகுகாலம் 04.30 – 06.00 | சுபநேரம் மு.ப. 07.45 – 08.45 | எமகண்டம் பி.ப. 12.00 – 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆக்கம் | ஆரோக்கியம் | ஜெயம் | பாசம் | உதவி | போட்டி | சினம் | மறதி | ஆர்வம் | ஒய்வு | பக்தி | பாராட்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள் சிறுவன் தற்கொலை

கொழும்பு,டிசெ.17

பொலனறுவைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவன் நேற்றுச் சனிக்கிழமை தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதியதலாவை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுவன் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பிலான குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற உத்தரவுக்கமைய பொலனறுவைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே குறித்த சிறுவன் சிறைக் கூண்டுக்குள்ளேயே தற்கொலை செய்து கொண்டுள்ளான். சிறுவன் தற்கொலை செய்ய வேறு நபர்கள் யாரேனும் உதவியுள்ளார்களா என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)



# தாழிறங்கிய நிலம் மக்கள் பதற்றம்

கொழும்பு,டிசெ.17

உடுதும்புர ரம்புக்வெல்ல பகுதியில் நேற்று சனிக்கிழமை நிலம் தாழிறங்கியுள்ளது. இதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள், பிரதேச செயலாளருக்குக் குறித்த விடயம் தொடர்பில் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குறித்த பகுதியில் மண் சரிவு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் நிலம் தாழிறங்கிய பகுதியைச் சூழவுள்ள குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். (அ)

# இலங்கையின் இரண்டாவது தலைநகர்

கொழும்பு,டிசெ.17

இலங்கையின் இரண்டாவது தலைநகராகக் கடவத்தை நகரம் மாற்றப்படவுள்ளதால், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பிரதி அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தார்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியிலுள்ள பிரதான பரிமாற்ற மையமாகக் கடவத்தை நகரத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டு இலகு ரயில் சேவை கடவத்தை வரை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)



# இலங்கையில் பச்சைத் தாமரை

கொழும்பு,டிசெ.17

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரம் திடீரெனப் பச்சை நிறத்தில் ஒளிர ஆரம்பித்துள்ளது.

இதுவரை இளஞ்சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்த கோபுர வெளிச்சமே தற்போது பச்சை நிறத்துக்கு மாறியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் காரணமாகவே இவ்வாறு கோபுரத் தாமரை திடீரெனப் பச்சை நிறத்தில் ஒளிர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகில் பச்சை நிறத்தில் தாமரை மலர்ந்துள்ள ஒரே நாடு இலங்கை என கின்னஸ் சாதனை படைக்க கூடும் எனவும் எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த மகிந்த ஆட்சியின் போது சீனாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தாமரைக் கோபுரம், அடுத்த வருட ஆரம்பத்தில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.மேலும் மகிந்த தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்சியின் சின்னம் தாமரை மொட்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நிலக்கரி மின் நிலையம் நிர்மாணிக்கத் திட்டம்

கொழும்பு,டிசெ.17

நுரைச்சோலை மற்றும் சம்பூர் பிரதேசங்களில் மிகப் பெரிய நிலக்கரி மின் நிலையங்களை நிர்மாணிக்க மின்வலு எரிசக்தி அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.

இதற்கான அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அமைச்சரவைக்குப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கத் தேவையான காணிகளை ஒதுக்குமாறு அமைச்சர், அமைச்சரவைப் பத்திரம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)


# போதை மாத்திரையுடன் இளைஞன் கைது

கொழும்பு,டிசெ.17

போதை மாத்திரைகளைத் தன் வசம் வைத்திருந்த இளைஞன் ஒருவர் மட்டக்குளிப் பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். (அ)

# மாலைதீவுக் குழுவை சந்தித்தார் நாமல்



கொழும்பு,டிசெ.17

மாலைதீவுச் சுற்றுலாத்துறை அமைச்சர் மூசா சமீர் மற்றும் இலங்கைக்கான மாலைத்தீவு உயர்ஸ்தானிகர் மொஹமட் ஹுசைன் செரீப் ஆகியோரை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்றுச் சனிக்கிழமை சந்தித்தார்.

இதன்போது அவர் மாலைத்தீவு உயர்மட்டக் குழுவினருடன் கலந்துரையாடல் ஒன்றையும் முன்னெடுத்திருந்தார். இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் நாமல் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (அ)



## பிள்ளையளை வளக்கிறதும் ஒரு கலை குடும்பம் நடத்திறதும் ஒரு கலை

"ஓடி விளையாடப்பிடாது பாப்பா
ஓரிடத்திலை இருந்து படி பாப்பா. –

காலை எழுந்தவுடன் ரியூசன் – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல சினிமாப் பாட்டு
மாலை முழுதும் திருப்பி ரியூசன்
என்று பழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா
தேவைப்பட்டால் பொய்யும் சொல்லு பாப்பா
புறமும் சொல்ல வேணும் பாப்பா
தெய்வம் நமக்கு வரம் தரப் பாப்பா
அப்பப்ப அபிஷேகம் செய்ய வேண்டும் பாப்பா.
ஓடி விளையாடப்பிடாது பாப்பா
ஓரிடத்திலை இருந்து படி பாப்பா.

அப்பப்ப ரிப்பி ரிப்பி கேக்க வேணும் பாப்பா
நெக்ரோ சோடாவும் கேக்க வேணும் பாப்பா
பபிள் கம்மும் கேக்க வேணும் பாப்பா
பள்ளியிலை படிக்கத் தேவை இல்லைப் பாப்பா
நல்ல ரியூசன் வகுப்பிருக்குதெல்லோ பாப்பா
ஓடி விளையாடப்பிடாது பாப்பா
ஓரிடத்திலை இருந்து படி பாப்பா."

– நவீன பாரதியார்.

ஏன் இந்தப் பாரதியாற்றை பாட்டை மாத்திப்பாடினான் தெரியுமே? இப்ப காலத்துக்கேற்ற மாதிரி எல்லாம் மாறிற மாதிரி பாட்டையும் மாத்திப் படிச்சுப் பாத்தனான்.

அங்காலை பக்கத்து வீட்டுப் பெடிக்கு, இரண்டு நாளைக்கு முன்னம், பள்ளிக்குடத்திலை சோதினை முடிஞ்சு றிப்போட் குடுத்தவை. அவன் கன பாடங்களிலை நல்ல மாக்ஸ் வாங்கேல்லை எண்டு பெடியைப் போட்டுத் தாளிக்கிற சத்தம் கேட்டுது. நானும் முதலியும் தலைவாசலிலை இருந்து கதைச்சக் கொண்டிருந்த நாங்கள், எங்கடை காதுகளைக் கழட்டி அவையின்ரை முத்தத்திலை போட்டிட்டு இருந்தம். நடக்கிறதை வடிவாக் கேக்கிறதுக்கு.

பெடீன்ரை தாய்க்காறி கத்திறாள், "காலைமை அப்பா கொண்டு போய் மோட்ட சைக்கிளிலை ரியூசனுக்கு விடுறார். பிறகு வெய்யில், மழை எண்டு பாராமல் நான் என்ரை ஸ்கூட்டியிலை வந்து ஏத்திக் கொண்டு வாறன். பிறகு வேலைக்குப் போகேக்கை அப்பாவோடை பள்ளிக்குடம் போறாய். மற்றப் பிள்ளையளைப் போல சைக்கிளிலை போற பிரச்சினை உனக்கில்லை. கேட்ட சாமான்களெல்லாம் வாங்கித்தாறம். ரிவி பாக்க விடுறம். கேம்ஸ் விளையாட கொம்பியூட்டர் கேட்டாய் வாங்கித் தந்தம். மற்றவையளும் வாங்கி வைச்சிருக்கினம், அது மாதிரி எனக்கும் ஸ்மாட் போன் வேணும் எண்டு கேட்டாய் அதுகும் வாங்கித் தந்தம். வாய்க்கு ருசியா அப்பப்ப கேக்கேக்கை சமைச்சும் தாறம். வீட்டுச் சமையலை அடிக்கடி தாறதோ எண்டிட்டுப் பஞ்சியையும் பாராமல் அப்பப்ப போய்க் கொத்து றொட்டி, பிறைட் றைஸ், கேஎவ்சீ, பிசா எண்டும் வாங்கித் தாறார் அப்பா. நாங்கள் உனக்கென்ன பிழை விட்டதெண்டு இப்ப 30 உம் 40 உம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய்? நாயே..! பேயே..! கழுதையே..! பிசாசே..! எண்டு எல்லாத்தையும் சொல்லிப் பெடிக்கு நல்ல பூசையும், அபிஷேகமும் நடந்திது.

அடிக்கேக்கை "என்ரை ஐயோ" எண்டு ஏழு வீடு கேக்கக் கத்தின பெடியின்ரை மூச்சுப் பேச்சைக் கொஞ்ச நேரமாக் காணேல்லை. பாத்தால் அறையைப் பூட்டிப்போட்டு இருக்கிறான் எண்ட உடனை "என்ன? ஏதோ?" எண்டு பயந்து கதவைத் தட்டிச்சினம். பெடி துறக்காமல் உள்ளை இருந்திட்டான். தாயும், தேப்பனுமா பிறகு கதிரை வைச்சு ஏறிச் சுவர் ஓட்டையாலை பாத்தால் பெடி கொம்பியூட்டரிலை விளையாடிக் கொண்டிருக்கிது. அதுகளையும் சூடு, சுரணை இல்லாமல் வளத்துப் போட்டு அவை படுகிற பாட்டைப் பாருங்கோவன்.

முதலி கண்ணைக் காட்டிப் போட்டுச் சிரிச்சான். "பாரண்ணை விளையாட்டை. உந்த நாயே..! பேயே..! கழுதையே..! பிசாசே..! எண்டு பேசினதெல்லாம் தங்களைத்தான் எண்டு உவைக்குத் தெரியாது. பெடி, பெட்டையளை வளக்கத் தெரியாமல் வளத்துவிட்டிட்டு பிறகு திட்டிறது. ஊருகலந் தெரியாமை வளக்கிறது ஆற்றை குற்றம். பிள்ளையள் நோகப்பிடாது எண்டு பெற்றார் நினைக்கிறது பிழை இல்லை. அதுக்கு வாயைப் பிடிச்சால் மூக்கைத் திறக்கத் தெரியாமல் வளக்கிறதே? முதலிலை தாய், தேப்பன் பிள்ளையளை எப்பிடி வளக்கிறதெண்டதைப் படிக்க வேணும். பிள்ளையளை வளக்கிறதும் ஒரு கலை. குடும்பம் நடத்திறதும் ஒரு கலை. இது தெரியாமல்தான் கன பேர் தெண்டா எடுத்துக் கொண்டு இருக்கினம். எதையும் வில்லங்கமா நினைச்சா வில்லங்கந்தான்!

– வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையால் பேரதிர்ச்சி!

கொழும்பு,டிசெ.17

இலங்கையிலிருந்து தேயிலை உள்ளிட்ட விவசாய விளைபொருட்களை இறக்குமதி செய்வதற்கு ரஷ்ய அரசாங்கம் தடை விதித்திருப்பது, இலங்கை அரசாங்கத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதிக்குள் வண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, இலங்கையிலிருந்து தேயிலை உள்ளிட்ட விவசாய விளை பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா தற்காலிகக் கட்டுப்பாடு விதித்துள்ளது. குறித்த தடை நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது.

சாதாரண ஒரு வண்டால் விதிக்கப்பட்ட தடையால் இலங்கை பேரதிர்ச்சி அடைந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் ரஷ்யாவுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் தேயிலைக்கான தடை நீங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேயிலை வண்டு நம்முடையதல்ல!

## ரஷ்யாவிடம் கெஞ்சும் இலங்கை



கொழும்பு,டிசெ.17

இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதியைக் கட்டுப்படுத்த ரஷ்யா எடுத்த தீர்மானம் தொடர்பில் கலந்துரையாட, பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார்.

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையில் வண்டு ஒன்று இருந்தமையால் ரஷ்யா தமது கட்டுப்பாட்டுத் தீர்மானத்தை அறிவித்திருந்தது.

எனினும் இது ஒரு பிரத்தியேக சம்பவமென்றும்,இது தேயிலை உற்பத்தித் தரத்தில் மதிப்புக் குறைப்பை ஏற்படுத்தாது என்றும் இலங்கையின் தேயிலைச் சபை தெரிவித்தது.

மேலும் இறக்குமதித் தேயிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் வண்டு அரிசி போன்ற பொருட்களில் இருந்தாலும் கூட அது தேயிலையுடன் இருந்திருக்க வாய்ப்பில்லை. இந்த நிலையில் அந்த வண்டு இலங்கையுள்ள வண்டு என்பதை விடத் தேயிலையை ஏற்றிச்சென்ற கப்பலிலிருந்த வண்டாக இருந்திருக்கலாம் என்றும் சபை தெரிவித்தது. (அ)

# அந்தநாள் ஞாபகம்




**17.12.1947**

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது

# குப்பையில் எவரும் தலையிட வேண்டாம்



கொழும்பு,டிசெ.17


நாடு முழுவதுமுள்ள குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த மாதம்முதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் போவதாகவும் இதற்கு அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் தடையாக வரவேண்டாம் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

கம்பஹாவில் பிரதமர் ரணில் தலைமையில் நடைபெற்ற புதிய பஸ் தரிப்பு நிலையத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குத் தீர்வு காண வேண்டுமென முயற்சித்த சந்தர்ப்பங்கள் அனைத்திலும் அரசியல் கட்சிகள், தடையாகச் செயற்பட்டமையாலேயே அந்த முயற்சிகள் கைவிடப்பட்டதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (அ)

# வேட்பு மனு நிராகரிப்பு: சட்ட நடவடிக்கை தயார்

## மகிந்த ஆவேசம்



கொழும்பு,டிசெ.17

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், நீதிமன்றத்தில் தமக்கு நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறியுள்ளார்.

அவரது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் 6 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து நேற்று சனிக்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் தற்பொழுது தீர்மானம் எடுத்து முடிந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.(அ)

# சீருடையில் தலையீடு: அதிபர்களுக்குத் தண்டனை



கொழும்பு,டிசெ.17

பாடசாலை மாணவர்களுக்காக இலவசமாக வழங்கப்படும் சீருடை வவுச்சர்களை மாணவர்களிடம் கையளிக்காது அதன் பொருட்டுப் புடைவைகளை வழங்குதல் அல்லது வேறு தலையீடுகளை மேற்கொள்ளும் அதிபர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கையெடுக்குமாறு கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தமது அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வேண்டுகோள் விடுத்தார்.

சீருடை வவுச்சர் சீட்டுக்களினூடாகப் பாடசாலை மாணவர்கள் தமக்கு விருப்பமான விற்பனை நிலையத்தில் சீருடைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைப் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வர்த்தக நிலையங்களை விளம்பரப்படுத்தல் மற்றும் அங்கு கொள்வனவு செய்யுமாறு மாணவர்களை வலியுறுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பாடசாலை அதிபர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிபர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வியமைச்சு மேலும் எச்சரித்துள்ளது. (அ)

# யாழ்—கிளிநொச்சிக்கு நீர் விநியோகத் திட்டம்

கொழும்பு,டிசெ.17

ஒன்றிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம்,யாழ்- கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான மூன்று ஒப்பந்தங்களில் இலங்கை அரசாங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டன.

ஒன்றிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம். தெற்கு, மத்திய, சப்ரகமுவ, வடமேல், வடமத்திய மாகாணங்களிலும், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலும் 2014 ஆம் ஆண்டு முதல் அமுலாகிறது. இதன் பெறுமதி 27 கோடி அமெரிக்க டொலராகும்.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டங்களின் மூலம் குடா நாட்டில் நகரப் பிரதேசங்களின் சுகாதாரமும், ஆளணி வளமும் அபிவிருத்தி செய்யப்படும்.

இதன் கீழ் 308 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகளும்,308 கிலோ மீற்றர் நீளமான தேசிய வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பராமரிக்கப் படுகின்றன. இதற்கான மொத்த முதலீடு,90 கோடி 60 இலட்சம் அமெரிக்க டொலராகும்.(அ)

# வவுனியா விபத்தில் மூவர் படுகாயம்



வவுனியா,டிசெ.17

வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றுடன், துவிச்சக்கரவண்டியொன்று நேற்று சனிக்கிழமை மோதியதில் ஐந்து வயதுச் சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

வேப்பங்குளம் ஐந்தாம் ஒழுங்கைக் கருகில்,மன்னார் வீதியூடாக வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி மீது, அதே பாதையில் வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த 67 வயதுடைய முதியவரொருவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய பெண்ணும், அவரது 5 வயதுடைய மகளுமே காயமடைந்தனர். இவர்கள் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டனர்.

மேலும் விபத்துத் தொடர்பில் தகவல் வழங்கப்பட்ட போதும் பொலிஸார் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வரவில்லை எனப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ)

# காட்டுயானைகளை பாதுகாக்க முடிவு

கொழும்பு,டிசெ.17

காட்டு யானைகளைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

"கொம்பன் யானைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அவற்றின் கழுத்தில் சமிக்ஞையுடன் கூடிய கழுத்துப் பட்டிகளும்,காட்டு யானைகளின் தொல்லைகளிலிருந்து கிராமங்களைப் பாதுகாக்கும் நோக்கில் மின்சார வேலிகளும் அமைக்கப்படும்" எனவும் தெரிவித்தார். (அ)

# சலுகை விலையில் 8 அத்தியாவசியப் பொருட்கள்



கொழும்பு,டிசெ.17

எட்டு அத்தியாவசியப் பொருட்களைச் சலுகை விலையில் பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கம்பஹா பஸ் தரிப்பு நிலையத்தின் இரண்டாம் கட்ட விழாவில் கலந்து கொள்ளும் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மேலும்,எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டு வரை சலுகைப் பொதி வழங்கப்படவுள்ளது என்று தெரிவித்ததுடன் மக்களுக்குச் சுமை ஏற்படாத வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவில் 10 ஏக்கரில் வெளியேறியது இராணுவம்



முல்லைத்தீவு, டிசெ. 17

கேப்பாபிலவின் ஞானமூர்த்தி பிள்ளையார் கோயில் வளாகத்தில் நிலைகொண்டிருந்த இராணுவம் அங்கிருந்து வெளியேறியது.

இக்காணியின் உரிமையாளர்கள் வற்றாப்பளையில் தற்காலிகமாகக் குடியிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கை, போராட்டத்துக்கு அமையவே இராணுவம் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மேலும் சில பகுதிகளை விடுவிக்கும் எனக் கூறப்படுகின்றது. வரும் 28 ஆம் திகதி இந்தக் காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (ச)




# 1,281 பேர் ஒரே நாளில் கைது

கொழும்பு, டிசெ. 17

நாடு முழுவதும் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 1,281 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியில் இருந்து மாலை 5 மணி வரை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாட்டில் 722 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தை புறக்கணித்துப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 559 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் போது 6 துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நச்சு மதுபானம் மற்றும் சட்டவிரோத மதுபானம் தொடர்பான சுற்றிவளைப்பில் 586 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9 கிலோக்கிராம் கஞ்சா மற்றும் 25 கிராம் ஹெரோயின் அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 25,000 லீற்றருக்கும் அதிகமான சட்டவிரோத மதுபானமும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 14,706 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 10 பொலிஸ் நாய்களும் இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# பலியெடுத்தது நீலத்திமிங்கலம்



ரொறன்ரோ, டிசெ. 17

யாழ்ப்பாணத்து இளைஞர் கனடாவில் ப்ளூவேல் (நீலத்திமிங்கலம்) கேம் விளையாடி தற்கொலை செய்து கொண்டார்.

வடமராட்சியைச் சேர்ந்த - கனடாவின் ரொறன்ரோ நகரில் வசித்து வந்த 23 வயதான பாலமுரளி கிருஷ்ணா என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரியவருகின்றது.

ப்ளூவேல் கேமிற்கு அடிமையான நிலையில் மருத்துவ ஆலோசனையை இந்த இளைஞர் பெற்று வந்தார். இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்தார் எனக் கூறப்படுகின்றது. (ச)

## தொடர்ச்சிகள்

**புறக்கணிப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுகமளிக்கவில்லை.

முக்கியமாக இந்தக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்ட வனவள திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களங்களை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை. அவர்களுடன் பல பிரதேச செயலர்களும் கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தவை வருமாறு,

மாகாணத்தில் உள்ள காணி பிணக்குகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்த கூட்டத்தை ஒழுங்மைத்திருந்தோம். ஆனால் பல அரசாங்க அதிகாரிகள் கலந்துகொள்ள வில்லை. மன்னார் மாவட்டத்திலிருந்து இந்த கூட்டத்திற்கு வரவிருந்த பிரதேச செயலர்களை அரசாங்க அதிபர் தடுத்திருப்பதாக அறிய முடிகின்றது.

இது மிகுந்த கவலையளிக்கின்றது. மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்கு தடையாகவே உள்ளது. எனவே, இந்த பிரச்சினை தொடர்பாக ஆராய்வோம்.

இந்தக் கூட்டத்தில் அரச காணிகள் தொடர்பாகவும், வனவள திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் போன்ற மக்கள் காணிகளை அபகரிப்பது தொடர்பாகவும் ஆராந்துள்ளோம். இதனடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்போம். (ச)

**வாடகை கட்டாத...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், வேட்பு மனுவில் கையொப்பமிட்ட ஒருவர் தேர்தலிலிருந்து விலகலாம் என்ற ஒழுங்கு கிடையாது. எனினும் தனக்கு வாக்களிக்க வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.(ச)

**யார் மீது...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் சட்டத்தை மீறும் இந்தச் செயற்பாடானது, சட்ட ரீதியாக கையாள்வதற்கு நீண்ட காலமாகலாம்" என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

"வேட்பாளர் ஒருவருக்கு வாக்குரிமை கட்டாயம் குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வோம்" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

**கூட்டமைப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், தமிழ்த் தலைமைகளின் தவறான நடவடிக்கைகளே, எமது மக்களின் இத்தனை பாதிப்புக்களுக்குக் காரணம். ஆனால் இவை குறித்து சிந்திக்காதவர்களாகவே கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். இதனை மக்களும் தற்போது உணர்ந்துள்ளார்கள்.

நாங்கள் அரசுடன் இணங்கிச் செயற்பட்ட காலத்திலும் மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றோம். அரசில் தற்போது அங்கம் வகிக்காத நிலையிலும் மக்களுக்கான எமது சேவைகளை செய்து கொண்டே வருகின்றோம்.

ஆனால் மக்களுக்காக எதனையும் செய்யாது சுயநலனை முன்னிலைப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது. தற்போது தேர்தல் காலம் வந்துள்ளதால், தாமே மக்கள் பிரதிநிதிகள், தாங்களே எல்லாவற்றையும் செய்வதாக மக்களை ஏமாற்றவுள்ளனர். அவர்களை உசுப்பேத்தி அவர்களை ஏமாற்றி வாக்குகளை பெற முயல்வார்கள். இதனையே காலங்காலமாக அவர்கள் செய்து வந்திருக்கின்றனர்.

தற்போது மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர். அதாவது உசுப்பேத்தல்கள் ஏமாற்று வித்தைகளுக்கு இடங்கொடுக்காது சிந்தித்துச் செயற்படுவார்கள். அவ்வாறு மக்கள் செயற்பட்டு எமக்கான ஆதரவை முழுமையாக வழங்கும்போது முழுமையான பலத்துடன் நாம் மக்களுக்காக இன்னும் பலவற்றைச் செய்யத் தயாராக உள்ளோம் - என்றும் கூறினார். (ச)

**வாயே திறக்கேன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட விசேட கலந்துரையாடல் நேற்று யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது.

இதன் முடிவில் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். இதன்போது கூட்டமைப்பிற்குள் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்கள் தொடர்பில் முதலமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்குப் பதிலளிக்க மறுத்த அவர், ஏனைய கேள்விகளுக்கு பதிலளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவிருக்கின்ற நிலையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் தற்போது பெரும் முரண்பாடு ஏற்பட்டிருக்கின்றன. அத்தோடு உட்கட்சிப்பூசல்களும் அதிகரித்து தாக்குதல் வரை சென்றிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**அவதானம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை தொடக்கம் புத்தளம் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். இதனால் கடல் அடிக்கடி கொந்தளிப்புடன் காணப்படும் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை தொடக்கம் மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடற்பிரதேசங்களில் மழை பெய்யும் போது காற்றின் வேகம் மணிக்கு 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழிலாளர்களும் கடல் நடவடிக்கையில் ஈடுபடுவோரும் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

**30,000...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் மருத்துவ சேவைகள் ஒழுங்குறுத்தல் பேரவைக்கு தகவல் வழங்க முடியும் என அவர் கூறினார்.

மருத்துவர்கள், தனியார் வைத்திய நிலையங்களை நடத்துவார்களேயானால் அவை, பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயம். எனினும் பதிவு செய்யப்படாத வைத்திய நிலையங்களிலேயே போலி மருத்துவர்கள் செயற்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)

**தலை தெறிக்க...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்பல் தாங்கள் கொண்டுவந்த ஆயுதங்களையும், மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடியது.

அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களையும், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றிய மக்கள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
◆ மரண அறிவித்தல்
◆ நினைவஞ்சலி
◆ கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது



# காங்கிரஸின் தலைவரானார் ராகுல் காந்தி




புதுடெல்லி,டிசெ.17

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி நேற்று சனிக்கிழமை முறைப்படி பொறுப்பேற்றுக்கொண்டார்.

சோனியா காந்தி சமீபகாலமாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை பெயெடுத்து வருகிறார். இதனால் பல மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் அவரால் நேரடியாகப் பிரசாரத்தில் ஈடுபட முடியவில்லை. மூத்த நிர்வாகிகளை வீட்டுக்கழைத்துக் கட்சி தொடர்பாக ஆலோசனை வழங்கி வந்தார். இதையடுத்துக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக 11 ஆம் திகதி ராகுல் காந்தி போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே நேற்று அவர் உத்தியோகபூர்வமாகக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் 87 ஆவது தலைவராகவும் நேரு குடும்பத்திலிருந்து 6 ஆவது காங்கிரஸ் தலைவராகவும் ராகுல் காந்தி தேர்வாகியுள்ளார். நேற்றைய விழாவில் நாடு முழுவதிலுமிருந்து காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)



# ஊனமுற்ற தளபதி

சென்னை,டிசெ.17

தளபதி விஜய் நடிக்கவிருக்கும் அடுத்த படத்தில் இரண்டு வேடங்களில் நடிக்கவுள்ளதாகவும் அதில் ஒரு வேடம் ஊனமுற்ற வேடமாகவும் அமையும் எனக் கூறப்படுகின்றது.

விஜய் தற்போது முருகதாஸ் படத்துக்காகத் தயாராகி வருகின்றார். படத்தின் படப்பிடிப்பு பெப்ரவரியில் தொடங்கும் எனவும் அதுவரை முருகதாஸ் திரைக்கதை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இப்படத்தில் கத்தி போலவே இரண்டு வேடங்களில் விஜய் நடிப்பார் எனவும் அதிலும் ஒரு விஜய் உடல் ஊனமுற்றவராகத் தோன்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அப்படி நடந்தால் விஜய் தன் திரைப்பயணத்தில் இப்படி வித்தியாசமான வேடத்தில் நடிப்பது இதுவே முதன்முறை எனக் கூறப்படுகின்றது. (இ)

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்!

இந்தோனேசியா,டிசெ.17

இந்தோனேசியாவில் 6.5 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று நேற்று ஏற்பட்டது.

குறித்த நிலநடுக்கத்தையடுத்து இந்தோனேசிய அதிகாரிகள் சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளதால் அங்கு கடும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஜாவாத் தீவுகளில் ஏற்பட்ட குறித்த நிலநடுக்கமானது தலைநகர் ஜகார்த்தாவிலும் உணரப்பட்டது. சுமார் 91 கி.மீற்றர் ஆழத்துக்குத் தாக்கிய இந்த நிலநடுக்கத்தால் பொருட்சேதம் மற்றும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக இந்தோனேசியப் பேரிடர் மேலாண்மை அமைப்புத் தெரிவித்தது. (இ)

# ஈரான் ஏவுகணையே சவுதியில் வெடித்தது

சவுதி,டிசெ.17

"சவுதியை நோக்கிக் ஹவுத்திப் போராட்டக்காரர்களால் வீசப்பட்ட ஏவுகணை ஈரானில் உற்பத்தி செய்யப்பட்டது" என அமெரிக்கா நேற்று சனிக்கிழமை தெரிவித்தது.

யேமனில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவுதி அரேபியாவும், ஹவுத்திப் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக ஈரானும் செயல்படுகின்றன.

சில நாட்களுக்கு முன் சவுதியின் ரியாத் விமான நிலையத்தைக் குறி வைத்துத் ஏவுகணைத் தாக்குதலை ஹவுத்திப் போராளிகள் நடத்தினர். இந்த ஏவுகணையே ஈரானில் தயாரிக்கப்பட்டதென ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார். இருப்பினும் இதனை ஈரான் மறுத்துள்ளது. (இ)



# பாவனாவுக்குத் திருமணம்

சென்னை,டிசெ.17

நடிகை பாவனாவுக்கு இந்த மாதம் 22 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் சினிமா ரசிகர்களை அதிர்ச்சியாக்கும் வகையில் ஒரு கொடூர நிகழ்வு நடிகை பாவனாவுக்கு நடந்தது. அவருக்கு நடந்த அந்தக் கொடுமைக்குக் காரணமான நடிகரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து பாவனாவுக்கும் அவரது நீண்ட நாள் காதலரும், தயாரிப்பாளருமான நவீன் என்பவருக்கும் மார்ச் 9 ஆம் திகதி நிச்சயதார்த்தம் நடந்தது.

இந்த நிலையில் இருவருக்கும் டிசெம்பர் 22ஆம் திகதி உறவினர்கள் மத்தியில் திருசூரில் திருமணம் நடக்கவிருக்கிறது. திருமண விழா நிச்சயதார்த்தம் நடந்தது போல் மிகவும் சாதாரணமாகவே நடைபெறவுள்ளது. (இ)

# 2018 மே மாதத்தில் ஹரியின் திருமணம்

பிரிட்டன்,டிசெ.17

பிரிட்டன் இளவரசர் ஹரி- மேகன் மெர்க்கல் திருமணம் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறு மெனக் கென்சிங்டன் அரண்மனை அதிகார பூர்வமாக நேற்று சனிக்கிழமை அறிவித்தது.

கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து காதலித்து வரும் இந்த ஜோடிக்கு இந்த மாதத் தொடக்கத்தில் நிச்சயதார்த்தம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)





# தூக்கம் தொலையும்!

வடகொரியா,டிசெ.17

அமெரிக்காவின் அச்சுறுத்தல் தொடர்ந்து நீடித்தால் பலர் தூக்கத்தைத் தொலைக்க வேண்டியிருக்கும் என வடகொரியா நேற்று சனிக்கிழமை பகிரங்க மிரட்டல் விடுத்தது.

வடகொரியாவின் நடவடிக்கைகள் மூன்றாவது உலக யுத்தத்தை வரவழைக்கும் வகையிலமைந்துள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்து வந்தாலும், அணு ஆயுதத் திட்டங்களால் உலகின் சக்தி வாய்ந்த நாடாக உருவாகும் வரை தங்களின் நடவடிக்கைகள் தொடரும் என வடகொரியாவும் பதிலடி கொடுத்து வருகிறது.

வடகொரியாவின் கொட்டத்தை அடக்க, தென் கொரியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து அமெரிக்கா போர் ஒத்திகையிலும் ஈடுபட்டு வருகிறது. இதற்குப் பதிலடி தரும் வகையில், தங்கள் நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் அமெரிக்காவின் போக்குக் கண்டிக்கத்தக்கது என கடிந்துள்ள வடகொரியா, இதுபோன்ற நடவடிக்கைகள் பலரது தூக்கத்தைத் தொலைக்கக் காரணமாகும் என மறைமுகமாகப் போர் மூளும் அபாயம் குறித்து அமெரிக்காவை எச்சரித்துள்ளது. (இ)

# அறிவாலயத்தில் கருணாநிதி



சென்னை,டிசெ.17

ஒரு வருடத்துக்குப் பிறகு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கட்சித் தலைமையகமான அறிவாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வருகை தந்தார்.

உடல் நலக் குறைவால் பொது இடங்களுக்கு வருவதைத் தவிர்த்துள்ள தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி, ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு கட்சித் தலைமையகமான அண்ணா அறிவாலயத்துக்குக் வருகை தந்தார்.

அவருடன் தி.மு.க. செயல்தலைவர் மு.க. ஸ்டாலின், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் துரைமுருகன், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா ஆகியோரும் வந்திருந்தனர்.

அறிவாலயத்தில் கருணாநிதியிடம் அளிக்கப்பட்ட காகிதத்தில் தனது கையெழுத்திட்டு விட்டு 15 நிமிடங்களில் மீண்டும் தனது இல்லம் திரும்பினார். (இ)

# உயிர் விடத் துணிந்த ரஜினி ரசிகன்

சென்னை,டிசெ.17

நடிகர் ரஜனி அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாததால் அவரது ரசிகரொருவர் அவரது பிறந்த தினமன்று விஷமருந்தித் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

ரஜினி அரசியலுக்கு வருகிறார் என்று பலவருடங்களாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே தவிர இதுவரை அறிவிக்கவில்லை. சில மாதங்களுக்கு முன்பு முதல்முறையாகத் தனது அரசியல் பிரவேசத்தைப் பற்றி பேசினார். அப்போது, "போர்வரும் போது பார்த்துக்கொள்வோம்" என்று சூசகமாக அரசியல் கட்சி தொடங்குவது பற்றி அறிவித்தார். இதற்கான முடிவு அவரது பிறந்த நாளை முன்னிட்டு வெளியாகுமென்று ரசிகர்கள் காத்திருந்தும், வழக்கம் போல் எந்த அறிவிப்பும் வெளிவராமல் ரசிகர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

இதனால் விரக்தியடைந்த சேலம் ரசிகர் மன்ற நிர்வாகி ஏழுமலை என்பவர் விஷம் குடித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவருக்குத் திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஸ்மித் இரட்டைச் சதம் வலுவாக அவுஸ்ரேலியா

பேர்த், டிசெ. 17

இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்ரேலிய அணியின் தலைவர் ஸ்மித் இரட்டைச் சதம் அடித்தும், மிற்சல் மார்ஷ் அபார 181 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இதனால் அந்த அணி 146 ஓட்டங்கள் முன்னிலையில் வலுவாக உள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகள் மோதும் ஆஷஸின் மூன்றாவது போட்டி பேர்த்தில் நடக்கிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 403 ஓட்டங்களை எடுத்தது. மலான் 140, பேர்ஸ்ரோவ் 119 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

203 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தைத் தொடங்கியது ஸ்மித் (92) ஷோன் மார்ஷ் (7) ஜோடி. ஸ்மித் 138 பந்துகளில் சதமடித்தார். ஷோன் மார்ஸ் 28 ஓட்டங்களுடன் மொயின் அலியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மிற்சல் மார்ஷ், ஸ்மித்துக்கு சிறப்பான ஒத்துழைப்புக் கொடுத்தார். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மதிய உணவு இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 314 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் எளிதாக இங்கிலாந்தின் இலக்கை எட்டிவிடும் நிலை இருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து நடந்த ஆட்டத்தில், இருவரையும் பிரிக்க இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவின. ஆனால் ஓட்ட எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தது. தேநீர் இடைவேளையின் முன்பாக மிற்சல் மார்ஷ் சதம் தொட்டார்.

ஸ்மித் 301 பந்துகளில் இரட்டைச் சதம் அடித்தார். மார்ஷும் 150 ஓட்டங்களைக் கடந்தார். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களால் இருவரையும் எதுவும் செய்ய முடியவில்லை.

மூன்றாம் நாளான நேற்றைய ஆட்டம் முடிவில் அவுஸ்ரேலியா 4 விக்கெட்கள் இழப்புக்கு 549 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்மித் 229, மார்ஷ் 181 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். பெரும்பாலும் இந்தப் போட்டியையும் வென்று அவுஸ்ரேலியா தொடரைக் கைப்பற்றும் வாய்ப்பு உள்ளது. (ச)

## மத்தியூஸ் இன்று களமிறங்குவார்

விசாகப்பட்டினம், டிசெ. 17

இந்தியாவுக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியில் அஞ்சலோ மத்தியூஸ் களமிறங்குவார் என இலங்கை அணியின் முகாமையாளர் அசங்க குருசிங்க அறிவித்துள்ளார்.

தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்டிருந்த மத்தியூஸ் அதிலிருந்த குணமடைந்து விட்டார் எனவும் அவர் கூறினார்.

மொகாலியில் நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் மத்தியூஸ் 111 ஓட்டங்களை விளாசியிருந்தார். அச்சமயம் தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்டார்.

இந்நிலையில் இறுதி ஒருநாள் போட்டி இன்று விசாகப்பட்டினத்தில் நடக்கவுள்ளது. இதில் அவர் பங்கேற்க வாய்ப்பில்லை எனக் கூறப்பட்டது. இந்நிலையிலேயே இதனை மறுத்த அசங்க குருசிங்க, மத்தியூஸ் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இன்றைய போட்டியிலும் பங்கேற்பார் எனத் தெரிவித்தார். (ச)

## சத நாயகன்

பேர்த், டிசெ. 17

நேற்றுத் தனது 22 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்த ஸ்மித் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார்.

சச்சின் டெண்டுல்கர் 114 இனிங்ஸ்களில் நிகழ்த்திய சாதனையை ஸ்மித் 108 இனிங்ஸ் களிலேயே படைத்துள்ளார்.

எனினும் இந்தப் பட்டியலில் 58 இனிங்ஸ்களில் டொன் பிரட்மனும், 101 இனிங்ஸ்களில் சுனில் கவாஸ்கரும் இந்த சாதனையைப் படைத்து முதலிரு இடங்களில் உள்ளனர்.

இதேபோன்று நேற்றைய தினம் இரட்டைச் சதம் கடந்த ஸ்மித் நடப்பு ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களைத் தொடர்ச்சியாக நான்காவது தடவையும் கடந்த வீரர் என்ற பெருமையையும் பெற்றார். முன்பாக மத்தியூ ஹைடன் இந்த சாதனையைப் படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## ஓவர் ஒன்று சிக்சர்கள் ஏழு

இலங்கையில் நடைபெற்ற பதினைந்து வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் நவீந்து பக்சாரா ஒரே ஓவரில் 7 சிக்ஸர்கள் அடித்து அசத்தியுள்ளார்.

இந்தத் தொடரின் இறுதி ஆட்டம் ஹிக்காடுவாவில் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பொக் அக்கடமி அணியும், தர்மபால கொட்டாவ அணியும் மோதின. இதில், பொக் அகடமி அணியில் நவீந்து பக்சாரா ஒரே ஓவரில் 7 சிக்ஸர்கள் விளாசி அசத்தியுள்ளார்.

இந்த ஓவரில் ஒரு நோ போல் வீசப்பட்டதால், அந்த பந்தையும் இவர் சிக்ஸராக அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு மடங்காகிறது சம்பளம்




புதுடில்லி, டிசெ. 17

இந்திய கிரிக்கெட் வீரர்கள் “ஏ”, “பி”, “சி” என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆண்டு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ். தோனி, தலைவர் விராட் கோலி, அஸ்வின் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் “ஏ” பிரிவில் இடம்பெற்றுள்ளனர். இந்தப் பிரிவில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு ஆண்டு ஊதியம் 2 கோடி இந்திய ரூபா வழங்கப்படுகின்றது.

“பி” பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு ஒரு கோடி ரூபாவும், “சி” பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு 50 லட்சம் ரூபாவும் வழங்கப்டுகிறது.

இந்த ஒப்பந்தம் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் காலாவதி ஆகிவிட்டது. அதிக போட்டிகளில் பங்கேற்பதால், வீரர்களுக்கான ஆண்டு ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று பி.சி.சி.ஐ. நிர்வாகக் குழுத் தலைவர் வினோத் ராயிடம், விராட் கோலி, அணியின் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் அண்மையில் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், கிரிக்கெட் வீரர்களுக்கான ஆண்டு ஊதியத்தை 100 சதவீதம் உயர்த்தும் வகையில், புதிய ஊதியப் பட்டியலை வினோத் ராய் தலைமையிலான பிசிசிஐ நிர்வாகக் குழு தயாரித்து வருவதாக கூறப்படுகிறது.

வீரர்களுக்கான ஆண்டு ஊதியத்தை அளிக்க பிசிசிஐ 180 கோடி ரூபாவை ஒதுக்கி வருகிறது. தற்போது, அந்தத் தொகையுடன் மேலும் 200 கோடி ரூபா கூடுதலாக சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

இதனால், அந்தத் தொகை ரூ.380 கோடியாக அதிகரிக்கும். கோலி போன்ற மூத்த வீரர்களின் சம்பளம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் 46 போட்டிகளில் கோலி விளையாடியுள்ளார். இதற்காக 5.5 கோடி ரூபாவை ஊதியமாகப் பெற்றுள்ளார். சம்பள அதிகரிப்பின் மூலம் அவர் 10 கோடி ரூபாவிலும் அதிகமாகப் பெறுவார் - எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 17.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.